# Jaffna Science Association

## 26th Annual Scientific Sessions
## 31 July & 1, 2 August 2019

*Chief Guest*

**Professor S. N. Surenthiran**

**B.Sc. (Sp.) (Jaffna), PhD (Colombo)**
**Charted Biologist (Sri Lanka), Fellow of the Royal Entomological Society (FRES)**

**Professor in Zoology, Department of Zoology, Faculty of Science, University of Jaffna**

VENUE

**Library Auditorium,**
**University of Jaffna**

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்
JAFFNA SCIENCE ASSOCIATION
SINCE 1991

# Proceedings of Jaffna Science Association

**Presidential Address**

**Chief Guest's Address**

**Sectional Chairpersons' Addresses**

**Popular Lectures**

**Theme Seminar Presentations**

**Volume: 26** **No: 02**

**Twenty Sixth Annual Sessions**

**31st July, 1st & 2nd August 2019**

**Jaffna, Sri Lanka**

**ISSN 1800-1300**

## யுத்தத்திற்கு பின்னரான சூழமைவில் வடமாகாண பாடசாலைக் கல்வியின் பேண்தகுநிலை

## (Sustainability of School Education in the Northern Province in the postwar context)

*திரு. ஆ. நித்திலவர்ணன்*

*கல்வியியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

'யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவில், வடமாகாண பாடசாலைக்கல்வியின் பேண்தகுநிலை' என்ற தலைப்பிலான எனது உரையானது, பின்வரும் உபதலைப்புக்களைக் கொண்டதாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

- வடமாகாணத்தில் யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவு
- இலங்கைப் பாடசாலைக் கல்வியின் கட்டமைப்பு
- பொதுப்பரீட்சைகளில் மாணவர்களின் அடைவுமட்டங்கள்
- வடமாகாண பொதுக்கல்விப் பிரச்சினைகளும் சவால்களும்
- இலங்கையின் பொதுக்கல்வியில் புதிய அறிமுகங்களும் சீர்திருத்தங்களும் மற்றும்
- பொதுக்கல்விப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகள்

**இலங்கையின் வடமாகாணத்தில் யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவு (Postwar context in the Northern Province)**

இலங்கையில் 30 ஆண்டுகளாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் நிறைவடைந்ததாக இலங்கை அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. யுத்தத்திற்குப் பின்னரான (2009 -2019) பத்து ஆண்டுகளில் வடமாகாணத்தின் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூகம் சார்ந்த துறைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன.

இலங்கையின் வடமாகாணத்தில் வாழும் மக்கள், பல்வேறு சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைகள், காணி அபகரிப்பு, யுத்தப்பாதிப்புக்கள். யுத்தத்திற்குப் பின்னரான மனவடு, சமூகச்சீர்கேடுகள். அதிகரித்த மது மற்றும் போதைப்பாருள் பாவனை, அதிகரித்த வீதிவிபத்துக்கள் மற்றும் மதரீதியான முரண்பாடுகள் என்பவை அவற்றுள் முக்கியமானவையாகும். இந்தப்பின்னணியில், கடந்த பத்தாண்டுகளில் பாடசாலைக்கல்வியின் நிலை பற்றி ஆராய்வதே இந்த உரையின் நோக்கமாகும்.

**இலங்கையின் பொதுக்கல்விக்கட்டமைப்பு (Sri Lankan Education System)**

இலங்கையின் பொதுக்கல்விக்கட்டமைப்பு பின்வரும் ஒழுங்கமைப்புக்களைக் கொண்டது:

- ஆரம்ப பிள்ளைக்கல்வி (Early Childhood Education) (3-5 year age)
- பாடசாலைக்கல்வி (School Education)
  - ஆரம்பக்கல்வி (Primary Education) (தரம் 1 - 5)
  - கனிஸ்ட இடைநிலைக்கல்வி (Junior Secondary Education) (தரம் 6 - 9 )
  - சிரேஸ்ட இடைநிலைக்கல்வி (Senior Secondary Education) (தரம் 10 - 13)





Figure -1 - Organizational structure showing three stages of the Sri Lankan education system
(Adapted from World Bank, 2005)

**வட மாகாணம் எதிர்நோக்கும் பொதுக் கல்விசார் பிரச்சினைகள்**

வடமாகாணத்தின் கல்வி நிர்வாகக் கட்டமைப்பில் 12 கல்விவலயங்களும் 35 கல்விக்கோட்டங்களும் அமைந்துள்ளன. யுத்தம் நிறைவடைந்து 10 ஆண்டுகள் சென்றபோதும் 87 பாடசாலைகள் இன்னும் மீளத்திறக்கவில்லை. அதேநேரம், மாணவர் எண்ணிக்கை குறைவு காரணமாகப் பல சிறிய பாடசாலைகள் மூடப்படும் ஆபத்தினை எதிர்நோக்கியுள்ளன. வலிகாமம் மற்றும் கிளிநொச்சி ஆகிய கல்விவலயங்கள் அதிக பாடசாலைகளைக் கொண்டு இயங்குவதன் காரணமாக அவற்றினை நிர்வகிப்பது மற்றும் பாடசாலைகளின் வெளியக மேற்பார்வை என்பன கடினமாக உள்ளது.

பாடசாலைகளுக்கிடையில் மாணவர் பரம்பல் என்பது முக்கிய கல்விப்பிரச்சினையாகக் காணப்படுகின்றது. பிரபல பாடசாலைகளில் அளவுக்கதிகமாக மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள். இது தொடர்பான விரிவான ஆய்வு தேவைப்படுகின்றது. ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் ஆசிரியர் - மாணவர் விகிதம் திருப்திகரமாகக் காணப்படுகின்ற போதும் பாட ரீதியான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தொடர்ச்சியாகக் கற்பிப்பதற்கான கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமையற்ற தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய உதவியாளர்கள் நியமனம் வழங்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில், விசேட தேவையுடைய மாணவர்கள், ஏனைய மாகாணங்களை விட அதிகமானதாகக் காணப்படுகின்றனர் (அட்டவணை-1). மேலும், மாகாணத்தில் ஆரம்பப்பிள்ளைக்கல்வி (முன்பள்ளிக்கல்வி) வழங்கலில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன (அட்டவணை-2).

அட்டவணை-1 : வடக்கு மாகாணத்திலுள்ள விசேட தேவையுடைய மாணவர் எண்ணிக்கையும் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் எண்ணிக்கையும் -2012

| கல்வி வலயம் | விசேட தேவையுடைய மாணவர் எண்ணிக்கை | விசேடதேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|---|
| தீவகம் | 466 | 2 |
| யாழ்ப்பாணம் | 746 | 11 |
| கிளிநொச்சி | 842 | 12 |
| மடு | 278 | 8 |
| மன்னார் | 611 | 8 |
| முல்லைத்தீவு | 655 | 12 |
| தென்மராட்சி | 34 | 4 |
| துணுக்காய் | 298 | 10 |
| வடமராட்சி | 89 | 6 |
| வலிகாமம் | 1090 | 8 |
| வவுனியா வடக்கு | 204 | 5 |
| வவுனியா தெற்கு | 388 | 6 |

(மூலம்: வடமாகாண கல்வித்திணைக்களம், 2012)

அட்டவணை-2: வடக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வி மற்றும் தொழில் தகைமைகள்

| கல்வி வலயம் | முன்பள்ளி ஆசிரியர் எண்ணிக்கை | கல்வித் தகைமை | | | தொழில் தகைமை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | க.பொ.த (உயர் தரம்) சித்தி | க.பொ.த (சாதாரண தரம்) சித்தி | க.பொ.த (சாதாரண தரம்) சித்தியடை யாதோர் | Aaruthal | OUSL | தொழில் தகைமையற்றோர் |
| தீவகம் | 131 | 44 | 05 | 82 | 84 | 06 | 41 |
| யாழ்ப்பாணம் | 367 | 135 | 17 | 215 | 227 | 26 | 114 |
| கிளிநொச்சி | 450 | 72 | 32 | 346 | 392 | 06 | 52 |
| மடு | 85 | 35 | 03 | 47 | 78 | 0 | 7 |
| மன்னார் | 175 | 99 | 0 | 76 | 147 | 05 | 23 |
| முல்லைத்தீவு | 213 | 39 | 11 | 163 | 199 | 02 | 12 |
| தென்மராட்சி | 131 | 53 | 01 | 77 | 92 | 0 | 39 |
| துணுக்காய் | 156 | 28 | 11 | 117 | 144 | 06 | 6 |
| வடமராட்சி | 274 | 96 | 07 | 171 | 172 | 01 | 101 |
| வலிகாமம் | 362 | 158 | 15 | 189 | 273 | 06 | 83 |
| வவுனியா வடக்கு | 85 | 20 | 4 | 61 | 76 | 01 | 8 |
| வவுனியா தெற்கு | 251 | 82 | 27 | 142 | 187 | 06 | 58 |
| **வடமாகாணம்** | **2680** | **861** | **133** | **1686** | **2071** | **65** | **544** |

(மூலம்: வடமாகாண கல்வித்திணைக்களம், 2012)

**பொதுப்பரீட்சைகளில் பாடசாலை மாணவர்களின் அடைவு மட்டங்கள்**

**தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் போக்குகள்**

அட்டவணை-3: 2011 தொடக்கம் 2015 வரையிலான ஐந்தாண்டுகளில் மாகாண ரீதியாக தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர் சதவீதம்.

| மாகாணம் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | 10.89 | 11.21 | 9.97 | 10.18 | 9.86 |
| மத்திய மாகாணம் | 7.34 | 7.7 | 6.82 | 6.91 | 6.59 |
| தென் மாகாணம் | 11.03 | 11.76 | 11.67 | 11.36 | 10.42 |
| வட மாகாணம் | 9.62 | 9.46 | 11.02 | 11.00 | 11.38 |
| கிழக்கு மாகாணம் | 10.32 | 10.41 | 9.66 | 8.52 | 7.99 |
| வடமேல் மாகாணம் | 11.62 | 12.15 | 11.30 | 11.37 | 10.51 |
| வடமத்திய மாகாணம் | 10.24 | 11.05 | 10.18 | 9.72 | 9.69 |
| ஊவா மாகாணம் | 10.30 | 10.54 | 10.05 | 9.14 | 9.72 |
| சப்பிரகமுவா மாகாணம் | 11.57 | 11.81 | 11.55 | 11.84 | 10.64 |
| இலங்கை | 10.38 | 10.76 | 10.12 | 9.99 | 9.55 |


(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - 2015)

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர் சதவீதமானது, ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வடமாகாணப்பெறுபேறுகள் திருப்திகரமான நிலையிலுள்ளது.


மேலும் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட (ஒவ்வொரு வினாத்தாளிலும் 35 புள்ளிகளுக்குமேல்) மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் மாகாணங்களை வரிசைப்படுத்துகின்றபோது, வடமாகாணம் 8 ஆம் வரிசைநிலையில் உள்ளது. வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் தேசியரீதியாக பெறும் வரிசைநிலையும் பின்தங்கியதாகவே காணப்படுகின்றது.

அத்துடன் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், தேசியரீதியாக 107 பாடசாலைகள் உயர்சித்திவீதம் கொண்ட பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் வடமாகாணத்தைச் சேர்ந்த 08 பாடசாலைகள் மாத்திரமே இடம்பெற்றிருந்தன.

**க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் போக்குகள்**




உரு-2: க.பொ.த சாதாரண தரப்பரீட்சை 2009 – 2015 மாகாணங்களின் பெறுபேறுகள்




உரு-3: க.பொ.த சாதாரண தரப்பரீட்சை 2005– 2017 வடமாகாணப் பெறுபேற்றினை

தேசியமட்ட பெறுபேற்றுடன் ஒப்பீடு

க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், க.பொ.த (உயர்தரம்) கற்கத் தகைமை பெறுவோரில் வடமாகாணம் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது. க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், க.பொ.த (உயர்தரம்) கற்க தகைமை பெறுதலின் அடிப்படையில், வடமாகாணத்திலுள்ள மாவட்டங்கள் பெறும் வரிசைநிலையும் பின்தங்கியதாகவே காணப்படுகின்றது. அத்துடன் 2015 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், தேசியரீதியில் முதல் ஒன்பது இடங்களுக்குள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் எந்தவொரு மாவட்டமும் இடம்பெறவில்லை.

**க.பொ.த உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளின் போக்குகள்**

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சையில் பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் அடிப்படையில், ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடமாகாணம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் அடிப்படையில், ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடமாகாணம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. பாடத்துறை ரீதியாகவும் வடமாகாணம் முன்னணியிலுள்ளது.

**பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளில் தளம்பல்நிலை அல்லது வீழ்ச்சிநிலைக்கான காரணங்கள்**

பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளில் தளம்பல்நிலை அல்லது வீழ்ச்சிநிலையில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

1. **நீண்டகால யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்களும் யுத்தத்திற்குப் பின்னரான சூழல் ஏற்படுத்திய பாதிப்புக்களும்** - உடல் மற்றும் உளப் பாதிப்புக்கள், பாடசாலைகள் மற்றும் பௌதீக வளங்களின் அழிவு, இடப்பெயர்வு
2. **வடமாகாண முன்பள்ளிக்கல்வி வழங்கலில் காணப்படும் குறைபாடுகள்** – முறையான முன்பள்ளிக் கொள்கை மற்றும் கலைத்திட்டமின்மை, பயிற்சியற்ற ஆசிரியர்கள், ஆசிரியர்களுக்குப் போதிய வேதனம் வழங்கப்படுவதில்லை மற்றும் முன்பள்ளிகளின் மேற்பார்வையிலுள்ள குறைபாடுகள்
3. **மாணவர்கள் தொடர்பான காரணிகள்** – விழுமியக்குறைவு, அதிகரித்த சமூக ஊடகப்பாவனை மற்றும் வன்முறைக்கலாசாரம்
4. **ஆசிரியர்கள் தொடர்பான காரணிகள்** – அர்ப்பணிப்புக் குறைவு, தூர பணியிடங்களில் பணியாற்றத் தயங்குதல், பாட அறிவு மற்றும் கற்பித்தல் அறிவுக்குறைவு மற்றும் இற்றைப்படுத்தல் குறைவு
5. **பாடசாலை தொடர்பான காரணிகள்** – மனித மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறை
6. **கல்வி நிர்வாகம் தொடர்பான காரணிகள்** – நிர்வாகத்திறன் குறைவு மற்றும் தொடர் வாண்மைத்துவமின்மை
7. **குடும்பம் தொடர்பான காரணிகள்** – பிள்ளைகளின் கல்வியில் அக்கறையற்ற பெற்றோர்கள், அதிகரித்த பொழுது போக்குகள் மற்றும் தென்னிந்திய சினிமா மற்றும் தொடர் நாடகங்கள்
8. **சமூகம் தொடர்பான காரணிகள்** – மதுப்பாவனை, போதைப்பொருள் பாவனை மற்றும் வன்முறைக்கலாசாரம்
9. **அரசியல் மற்றும் திட்டமிட்ட புறக்கணிப்புக்கள்** – கல்வியில் இனரீதியான, மதரீதியான, மொழி ரீதியான மற்றும் அரசியல் ரீதியான புறக்கணிப்புக்கள்

**இலங்கையின் பொதுக்கல்வியில் புதிய அறிமுகங்களும் சீர்திருத்தங்களும்**

தேசிய ரீதியாகப் பல புதிய அறிமுகங்களும் சீர்திருத்தங்களும் கல்வியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன அவற்றுள் முக்கியமானவையாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்ப பாடத்துறையின் அறிமுகம்
- 13 ஆண்டுகள் உத்தரவாதக் கல்வித்திட்டம்
- தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்கள் கட்டாயமாத் தோற்ற வேண்டிய தேவைப்பாடில்லை என்ற கல்வியமைச்சின் அறிவிப்பு
- தரம் - 6 தொடக்கம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக்கல்வி கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- தரம் - 1 தொடக்கம் வாய்மொழி ஆங்கிலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**சில சிபார்சுகளும் ஆலோசனைகளும்**

வடமாகாணப் பொதுக்கல்வி மேம்பாட்டுக்கான சில சிபார்சுகள் முன்வைக்கப்படுகின்றன.

- பாடசாலைகளுக்கிடையில் மாணவர் பரம்பல் சீர்செய்யப்படல் வேண்டும்.
- பரீட்சை அடைவுகளுக்கு அப்பால், மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் ஆளுமை விருத்திக்குப் பங்களிக்கும் செயற்பாடுகளுக்கு பாடசாலைகளும் பெற்றோர்களும் முக்கியத்துவமளிக்க வேண்டும்.
- பெற்றோர்களும் சமூகமும் 'பிரபல பாடசாலை' (Popular School) என்ற போலி மாயையிலிருந்து விடுபட வேண்டும்.
- தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் ஆசிரியர் பரம்பலைச் சீராக்க வேண்டும். அதேபோன்று கல்வி வலயங்களுக்கிடையில் ஆசிரியவளம் சமமாகப் பகிரப்பட வேண்டும்.
- திறமைமிக்க கல்வி நிருவாகிகள் மற்றும் அதிபர்களைத் பொருத்தமாக இடப்படுத்தல் செய்ய வேண்டும்.
- பெற்றோர்கள், பாடசாலைகள் மற்றும் சமூகம் மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் ஆன்மீகக் கல்விக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும்.

உசாத்துணைகள்

Central Bank of Sri Lanka (2015). Provincial Gross Domestic Product-2014, Press release of Communications Department, Central Bank of Sri Lanka, Colombo-01.

Department of Examinations (2014). Performance of Candidates of G.C.E (O/L) Examination-2014, Research and Development Branch, National Evaluation and Testing Service, Department of Examinations, Sri Lanka.

Department of Examinations (2015). Performance of Candidates of G.C.E (A/L) Examination-2015, Research and Development Branch, National Evaluation and Testing Service, Department of Examinations, Sri Lanka.

Department of Examinations (2015). Performance of Candidates of Grade Five Scholarship Examination-2015, Research and Development Branch, National Evaluation and Testing Service, Department of Examinations, Sri Lanka.

Gurukularajah, T. (2014). "Vulnerability in Northern Education', Discussion on 'Democratizing the North: A Dialogue on Governance, Development and Vulnerability', Jaffna, 10-01-2014.

Kadirgamar, A.(2015). Neoliberal state, rural dispossession and struggles for education, Neo liberalism, Critical Pedagogy and Education, Routledge India.

National Education Research and Evaluation Centre - NEREC (2012). National Assessment of Achievement of Grade- 08 Students in Sri Lanka-2012, University of Colombo, Sri Lanka.

Pathmarajah, M., Ethirveerasingam, N.(2017). Chapter 4, Northern Province Education System in Sri Lanka: Participating review, Recommendation, Implementation, and Monitoring.In: Kidwai H., Witenstein M., Byker E., Setty R.(eds) Participatory Action Research and Educational Development, South Asian Education Policy, Research and Practice, Palgrave Macmillan, Cham.

வடமாகாண கல்வி முகாமைத்துவ தரவுத்தொகுதி (Education Management Information System-EMIS), மாகாணக்கல்வித்திணைக்களம், வடமாகாணம், Retrieved from http://www. edudept. np.gov.lk on 19-04-2016.